செ.வெ.எண் 15

நாள் 4-1-08

கைத்தறி, கைத்திறன், துணிநூல் (ம) கதர் துறை

காஞ்சிபுரம் மாவட்டம் பட்டு நெசவாளர்களுக்கு சரிகை விநியோகம்

செய்திக் குறிப்பு

--

தமிழ்நாட்டில் மொத்தம் 70 பட்டு நெசவாளர் கூட்டுறவு சங்கங்கள் உள்ளன. இவற்றில் 25 பட்டு நெசவாளர் கூட்டுறவு சங்கங்கள் சுத்த சரிகையினை பயன்படுத்தி பட்டு இரகங்கள் உற்பத்தி செய்து வருகின்றன. இச்சங்கங்களுக்கு 31.1.2008 முடியவுள்ள 45 நாட்களுக்கு சுமார் 25,000 மார்க் சரிகை பட்டு இரக உற்பத்திக்கு தேவைப்படுகிறது. தமிழ்நாட்டிலுள்ள மேற்படி பட்டு நெசவாளர் கூட்டுறவு சங்கங்களுக்கு ஒப்பந்ததாரர்கள் மூலம் 15,000 மார்க் மற்றும் தமிழ்நாடு சரிகை நிறுவனம் மூலம் 10,000 மார்க் சரிகை விநியோகம் செய்யப்படும்.

2. காஞ்சிபுரம் மாவட்டத்தில் உள்ள 21 பட்டு நெசவாளர் கூட்டுறவு சங்கங்களில், 10 பட்டு நெசவாளர் கூட்டுறவு சங்கங்கள் மட்டுமே சுத்த சரிகையினை பயன்படுத்தி வருகின்றன. மேற்காணும் 10 பட்டு நெசவாளர் கூட்டுறவு சங்கங்களுக்கு நாளொன்றுக்கு 325 மார்க் சரிகையும், 31.1.2008 முடிய 16500 மார்க் சரிகையும் தேவைப்படுகிறது. கடந்த 7 நாட்களில் மட்டும் ஒப்பந்ததாரர்கள் மற்றும் தமிழ்நாடு சரிகை நிறுவனத்தால் சேர்ந்து 3775 மார்க் சரிகை மேற்கண்ட காஞ்சிபுரம் மாவட்டத்திலுள்ள 10 பட்டு நெசவாளர் கூட்டுறவு சங்கங்களுக்கு விநியோகம் செய்யப்பட்டுள்ளது.

3. மேற்கண்ட பட்டு நெசவாளர் கூட்டுறவு சங்கங்களில், 4.1.2008 தேதியில் 1924 சரிகை மார்க் இருப்பு உள்ளது. மேற்படி இருப்பில் உள்ள சரிகை மார்க் ஒரு வார காலத்திற்கு போதுமானதாகும். மேற்காணும் சங்கங்களுக்கு தேவையான சரிகை ஒப்பந்ததாரர்களாலும் தமிழ்நாடு சரிகை நிறுவனத்தாலும் 25.1.2008 தேதிக்குள் தொடர்ந்து விநியோகம் செய்யப்படும். எனவே மேற்படி பட்டு நெசவாளர் கூட்டுறவு சங்கங்களில் போதுமான சரிகை மார்க் இருப்பில் உள்ளதால் நெசவாளர்கள் பாதிப்படைய வாய்ப்பில்லை..

4. கைத்தறி மற்றும் துணிநூல் துறை அலுவலர்கள் சரிகை விநியோக நிலவரம் குறித்து தொடர்ந்து கண்காணித்து வருகின்றனர்.

ஏ. ஷெகாவ்கர் 4.1.08

அரசுச் செயலாளர்

(விஷ்வநாத் ஷெகாவ்கர்)

வெளியீடு, இயக்குநர்,

செய்தி, மக்கள் தொடர்புத் துறை

தலைமைச் செயலகம், சென்னை-9